



# சக்கர வியூகம்







Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 205 18.1.2026 SUNDAY THAI : 4 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 205 18.1.2026 ஞாயிற்றுக்கிழமை தை : 4 விலை : ரூ.5/–


## அரசு வேலை : ஜல்லிக்கட்டில் சிறந்த

# “மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை”

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: ஜன.18-

பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டு போட்டிகளில் அதிகக் காளைகளை அடக்கிய சிறந்த வீரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்படும் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்.

தொடர்ந்து, சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கால்நடை பராமரிப்புத்துறையில் அரசு வேலை வழங்கப்படும். அலங்காநல்லூரில் ரூ.2 கோடியில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும் என 2 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்.

தொன்மை நகரமான மதுரையில் தை மாதப் பிறப்பு பொங்கல் விழாவை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் தொடங்கும். தை மாதம் 1ம் தேதி (ஜன.15) மதுரை அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு தொடங்கும். 2ம்நாள் மதுரை மாவட்டம் பாலமேடு ஜல்லிக்கட்டு நடைபெறும். 3ம் நாள் உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் நடைபெறும்.

அதன்படி உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை நடத்த தமிழக அரசு சார்பில் மதுரை மாவட்ட நிர்வாகம் மற்றும் கிராம கமிட்டி சார்பில் விழா ஏற்பாடுகள் நடைபெற்றது.

தொடர்ந்து இன்று காலை 7 மணியளவில் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் தொடங்கியது. அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் ஆட்சியர் பிரவீன்குமார் முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி எடுத்தனர்.



இதில் வெற்றி பெறும் மாடுபிடி வீரர்கள், சிறந்த காளைகளுக்கும் ரூ. 2 கோடி மதிப்புள்ள பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த மாடுபிடி வீரருக்கு தமிழக முதல்வர் சார்பில் கார் பரிசும், சிறந்த காளைகளுக்கு துணை முதல்வர் சார்பில் டிராக்டர் பரிசும் வழங்கப்படுகின்றன.

பாலமேட்டில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டு போட்டிகளை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து இன்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு செல்லும் வழியில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை பார்வையிட வருகை தந்தார். மதுரையிலிருந்து அலங்காநல்லூர் செல்லும் வழி நெடுகிலும் திமுகவினர் திரண்டு வந்து வரவேற்பு அளித்தனர்.

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டிகளை காண தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காலை 11.05 மணிக்கு வருகை தந்தார். அவருடன் அமைச்சர்கள் பி.மூர்த்தி, கே.என்.நேரு, பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன், எம்பிக்கள் சு.வெங்கடேசன், தங்கத்தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர். பின்பு ஜல்லிக்கட்டு போட்டிகளை ஆர்வமுடன் பார்வையிட்டனர்.

களத்தில் நின்று களமாடிய காளையின் உரிமையாளர் திருச்சி முருகானந்தம், புதுக்கோட்டை மாவட்டம் கைக்குறிச்சி தமிழ்ச்செல்வன், வெளிச்சநத்தம் போலீஸ் சத்யா ஆகியோருக்கு தங்க மோதிரம் பரிசு வழங்கினார்.

பின்னர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில், “அனைவருக்கும் அன்பான வணக்கம். எல்லோருக்கும் பொங்கல் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவிக்க விரும்புகின்றேன். மதுரை மண் வீரம் விளைந்த மண். வீர விளையாட்டான உலகப்புகழ் பெற்ற அலங்கநல்லூர் பார்க்கும்போது நமக்கு வீரம் வருகிறது.

இதில் காளைகளை அடக்கும் காளையர்களை பார்க்கும்போது தமிழ் மண்ணுக்கே பெருமையாக இருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியில் சங்கம் வளர்த்த மதுரையில் அறிவுக்காக கலைஞர் நூற்றாண்டு நூலகம், தமிழர்களின் அடையாளமான வீர விளையாட்டுக்கு கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய சாதனையாகும்.

இப்போது ஜல்லிக்கட்டு போட்டியை ஒட்டி முதல்வராக சிலவற்றை அறிவிக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் எனக்கு திருப்தியாக இருக்கும். அந்த வகையில் முக்கியமான 2 அறிவிப்புகளை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாரம்பரிய ஜல்லிக்கட்டு விளையாட்டுப் போட்டிகளில் அதிக காளைகளை அடக்கி சிறந்து விளங்கும் வீரர்களுக்கு முன்னுரிமை அடிப்டையில் கால்நடை பராமரிப்புத் துறையில் பணி வழங்கப்படும்.

மேலும், உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான ரூ.2 கோடி மதிப்பில் சிறந்த பயிற்சி மற்றும் உயர்தர சிகிச்சை மையம் அமைக்கப்படும். என்பதை அறிவிக்கிறன். இதில் உங்களுக்கு மகிழ்ச்சிதானே, அந்த மகிழ்ச்சியான அறிவிப்புகளை அறிவித்த மகிழ்ச்சியோடு செல்கிறேன், என்றார். பின்னர், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடிக்கு புறப்பட்டுச் சென்றார்.



■ முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களின் 185ஆவது பிறந்த தினத்தையொட்டி தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சி, லோயர் கேம்ப் பகுதியில் அமைந்துள்ள கர்னல் ஜான் பென்னிகுவிக் மணிமண்டபத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங்,தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



## அதிமுகவின் 5 தேர்தல் வாக்குறுதிகள்

## பெரம்பலூர் நகர கழகம் சார்பில் இனிப்பு வழங்கி வெடி வெடித்து கொண்டாட்டம்

பெரம்பலூர், ஜன.18-

அதிமுக பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடியார் நேற்று அறிவித்த 5 தேர்தல் வாக்குறுதிகள்.

குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2000 வங்கி கணக்கில் செலுத்தப்படும், பெண்களை போல ஆண்களுக்கும் நகர பேருந்தில் இலவச பயணம், அம்மா வீடு வழங்கும் திட்டம் வீடு இல்லாத அனைவருக்கும் வீடு கட்டி தரப்படும், 125 நாள் வேலை திட்டம் 150 நாள் வேலை திட்டமாக செயல்படுத்தப்படும், 5 லட்சம் பெண்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க ரூ.25 ஆயிரம் மானியம் வழங்கப்படும் என .வெளியிட்டதற்கு நன்றி தெரிவித்து பெரம்பலூர் நகர கழகம் சார்பில், பெரம்பலூர் நகர கழக செயலாளர் ஆர்.ராஜ பூபதி நேற்று புதிய பேருந்து நிலையத்தில் வெடி வெடித்து, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார். உடன் நகர கழக தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தனிச்சியத்தில் அதிமுக சார்பில் எடப்பாடியார் பொங்கல் விழா: முன்னாள் அமைச்சர் உதயகுமார் கலந்து கொண்டார்

அலங்காநல்லூர் ஜன.18.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் தனிச்சியம் கிராமத்தில் அதிமுக சார்பில், எடப்பாடியார் கிச்சன் என்னும் தலைப்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர்

ஆர்.பி.உதயகுமார், கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தொடர்ந்து 100க்கும் மேற்பட்ட பெண்கள் பொங்கல் வைத்தனர். அவர்களுக்கு பொங்கல் பானை வாளி கரும்பு சர்க்கரை உள்ளிட்டவை அதிமுக சார்பில் வழங்கப்பட்டது.



இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, தமிழரசன், மாணிக்கம், மகேந்திரன், அம்மா பேரவை மாநில துணைச் செயலாளர்கள் வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, ராஜேஷ்கண்ணா, ஒன்றிய செயலாளர் கொரியர் கணேசன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் ஜெயச்சந்திரமணியன்,

மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார், மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் மனோகரன் கிளை செயலாளர் பாண்டுரங்கன் மற்றும் தொழிலதிபர்கள் மார்நாடு முத்துக்கிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி முரளி, அண்ணா தொழிற்சங்க ஒன்றிய செயலாளர் சுந்தர்ராஜன், அலங்காநல்லூர் ஒன்றிய துணைச் செயலாளர் சம்பத், நகர பொருளாளர் சுந்தரராகவன், தகவல் தொழில் நுட்ப அணி ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நல்லாம்பிள்ளையில் சுய உதவிக்குழு பெண்களுக்கு நிதி வழங்காவிட்டால் நடவடிக்கை எடுப்பேன் : அமைச்சர் ஐ.பெரியசாமி

சின்னாளபட்டி, ஜன. 18

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சித்தரேவு ஊராட்சிக்குட்பட்ட நல்லாம்பிள்ளையில் ரூ. 32 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூட வகுப்பறைகள் திறப்புவிழா மற்றும் ரூ. 50 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள சமுதாய கூடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் கோட்டாட்சியர் திருமலை தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், வட்டாட்சியர் முத்துமுருகன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய பொருளாளர் ராமநாதன் வரவேற்றார். விழாவில்



சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் புதிய பள்ளி வகுப்பறைகளை திறந்துவிட்டு புதிய சமுதாய கூடத்திற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை துவக்கி வைத்தார். அதன் பின்னார் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கினார்.

அப்போது அப்பகுதியைச் சேர்ந்த சுயஉதவிக் குழுவினர் சித்தரேவு மற்றும் சித்தையங்கோட்டையில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் மேலாளர் மற்றும் கணக்காளர்கள் சுயஉதவிக் குழு பெண்கள் கடன் வாங்கபி பணம் செலுத்திய பின்பும், தங்களுக்கு நிதி வழங்க தாமதப் படுத்துவததாகவும், கடந்த 5 மாதங்களாக நிதி வழங்கவில்லை என்றும் புகார் தெரிவித்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் செல்போன் மூலம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி அவர்களை தொடர்பு கொண்டு, சுயஉதவிக்குழு பெண்களுக்கு உடனடியாக சம்மந்தப்பட்ட வங்கிகள் மூலம் வழங்காவிட்டால் நானே களத்தில் இறங்குவேன் என்றும் சுயஉதவிக்குழு பெண்களுக்கு நிதி வழங்க லஞ்சம் கேட்ட பணியாளர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என கூறினார். உடனடியாக மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி, சிங்காரக்கோட்டையில் உள்ள கூட்டுறவு வங்கிக்கும், சித்தையன்கோட்டையில் உள்ள கூட்டுறவு வங்கிக்கும் சென்று நேரடியாக கள ஆய்வு செய்து சுயஉதவிக்குழு பெண்களுக்கு நிதி வழங்க உத்தரவிட்டார். அமைச்சரிடம் கோரிக்கை விடுத்த ஒரு மணி நேரத்தில் சுய உதவிக்குழு பெண்களுக்கு நிதி கிடைத்தது அப்பகுதி பெண்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தவிர அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சுயஉதவிக்குழு பெண்கள் மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்தனர்.



# எம்ஜிஆரின் மக்கள் நல சிந்தனைகளே அதிமுகவின் அடையாளம்

## தென்காசி புளியங்குடி மாவட்ட பிரதிநிதி நாகராஜ்

தென்காசி, ஜன.18.

தென்காசி மாவட்டம் புளியங்குடியில்பழைய மார்க்கெட் அருகில், அதிமுகவினர் எம்ஜிஆர் பிறந்த நாள் விழாவை, மாவட்ட பிரதிநிதி நாகராஜ் தலைமையில் வகித்தார் . மேலும் இன்று தமிழகம் முழுவதும் அதிமுகவினரால் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. பல்வேறு பகுதிகளில் அதிமுக கட்சி அலுவலகம் மற்றும் பொது இடங்களில் எம்.ஜி.ஆர் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து இனிப்புகள் வழங்கி பொதுமக்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

“எம்.ஜி.ஆரின் மக்கள் நல சிந்தனைகளே அதிமுகவின் அடையாளம்” என. மாவட்ட பிரதிநிதி நாகராஜ், உரையாற்றினார். விழாவில் வார்டு செயலாளர்கள் 2 வது வார்டு முருகன், 30வது வார்டு பரமசிவம், 18வது வார்டு முருகேசன், குருசாமி, 19வது வார்டு கருப்பசாமி, முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கணேசன், மகேஷ் பாண்டியன், மற்றும் கழக நிர்வாகிகள் அதிமுக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு உற்சாகமாக கொண்டாடினர்.



## புளியங்குடியில் ஓபிஎஸ் அணி சார்பில் எம்ஜிஆர் பிறந்த தின விழா

புளியங்குடியில், ஜன.18

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் பழைய மார்க்கெட் அருகே ஓபிஎஸ் அணி சார்பில் எம்ஜிஆர் பிறந்த தின விழா நடைபெற்றது. விழாவிற்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஆர்.ஆர். மூர்த்தி பாண்டியன் தலைமை வகித்தார். மாவட்ட மகளிர் அணி கழகச் செயலாளர் ஜெ ஸ்வர்ணா, கே. துரைப்பாண்டியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஆர் ஆர் மூர்த்தி பாண்டியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு எம்ஜிஆரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் நகர அவைத் தலைவர் கணபதி, நகர இளைஞர் அணி செயலாளர் காந்தன், ராம்ராஜ் ஹோட்டல் முருகன், உட்பட நகரக் கழக நிர்வாகிகள் வார்டு கழக நிர்வாகிகள் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



■ தேனி மேற்கு மாவட்டம் உத்தமபாளையம் வடக்கு ஒன்றியம் அஇஅதிமுக சார்பில் மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும் அஇஅதிமுக கட்சியின் நிறுவனத் தலைவருமான எம்ஜிஆரின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினரும் எஸ்.டி.கே.ஜக்கையன் தலைமையில் எம்ஜிஆரின் திரு உருவ சிலைக்கு மலர்தூவி, மாலை அணிவித்து மரியாதை செய்தனர் இந்நிகழ்யில் உத்தமபாளையம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வினோத் டி சிந்தலைச்சேரி கிளைச் செயலாளர் அந்தோனிமுத்து மற்றும் கட்சி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அமைச்சருடன் பேச்சுவார்த்தை தோல்வி: இடைநிலை ஆசிரியர்கள் மீண்டும் போராட்டம்

சென்னை, ஜன.18-

சம வேலைக்கு சம ஊதியம் தொடர்பாக பள்ளிக்கல்வித் துறை அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால், இடைநிலை ஆசிரியர்கள் மீண்டும் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.



சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஎ) சார்பில் கடந்த டிச.26ம் தேதி முதல் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதையடுத்து போராட்டத்தின் தீவிரத்தை கட்டுப்படுத்த எஸ்எஸ்டிஎ பொதுச்செயலாளர் ஜே.ராபர்ட் உள்ளிட்ட தலைமை நிர்வாகிகளை போலீஸார் வீட்டுக் காவலில் வைத்தனர். மேலும், போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களையும் உடனுக்குடன் தேடி, தேடி கைது செய்தனர். எனினும் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்ந்தது.

இந்நிலையில் எஸ்எஸ்டிஎ சங்க நிர்வாகிகளுடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் சென்னையில் உள்ள அவரது முகாம் அலுவலகத்தில் நேற்று பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து கல்வித் துறை அலுவலர்களும், ஆசிரியர் சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். இவ்விரு பேச்சுவார்த்தைகளும் சுமார் 7 மணி நேரம் நடைபெற்றது. இதையடுத்து கோரிக்கைகள் குறித்து முடிவெடுக்க போராட்டக் குழுவிடம் அதிகாரிகள் சிறிது அவகாசம் கேட்டதாக கூறப்படுகிறது.

இதையடுத்து இடைநிலை ஆசிரியர்கள் பொங்கல் பண்டிகையான நேற்று முன்தினம் மட்டும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. இந்நிலையில் கோரிக்கையை நிறைவேற்றுவது குறித்து எந்த பதிலும் வரவில்லை எனக்கூறி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் இடைநிலை ஆசிரியர்கள் நேற்று மீண்டும் போராட்டத்தைத் தொடர்ந்தனர். அவர்களை போலீஸார் கைது செய்து வாகனங்களில் ஏற்றினர். அப்போது ஆசிரியர்கள் காவல் துறையினர் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் அருகில் இருந்த சமுதாய நலக்கூடத்தில் அடைத்து வைத்து மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

# மகளிருக்கு மாதம் ரூ.2000, ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம்” இபிஎஸ் 5 வாக்குறுதிகள்

## அதிமுக முதற்கட்ட தேர்தல் அறிக்கை!

சென்னை, ஜன.18-

“மகளிருக்கு மாதம் ரூ.2000 வழங்கப்படும், ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து திட்டம் செயல்படுத்தப்படும்” என முதற்கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதிமுக நிறுவனத் தலைவர் எம்ஜிஆரின் 109வது பிறந்தநாள் விழாவையொட்டி சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி.கே. பழனிசாமி, முதற்கட்ட தேர்தல் வாக்குறுதியாக 5 அறிவிப்புகளை அறிவித்துள்ளார். 1. மகளிர் நலன் : (குலவிளக்குத் திட்டம்) சமூகத்தில் பொருளாதார



சமநிலையை உருவாக்கிட, குலவிளக்கு திட்டத்தின் மூலம் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் உதவித் தொகையாக ரூபாய் 2,000/ வழங்கப்படும். இத்தொகை குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். 2. ஆண்களுக்கும், மகளிருக்கும் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம்: நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும், நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 3. அனைவருக்கும் வீடு (அம்மா இல்லம் திட்டம்): அம்மா இல்லம் திட்டம்' மூலம், கிராமப்புறங்களில் குடியிருப்பதற்கு சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

அதேபோல், நகரப் பகுதிகளில் சொந்த வீடு இல்லாதவர்களுக்கு, அரசே இடம் வாங்கி அடுக்குமாடி வீடுகள் கட்டி 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் விலையில்லாமல் வழங்கப்படும். அதைப் போலவே, ஒரே குடும்பத்தில் வசிக்கும் பட்டியலின மக்கள், அவர்களுடைய மகன்கள் திருமணமாகி தனிக்குடித்தனம் செல்கின்றபோது, அரசே இடம் வாங்கி. அவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்.

4. 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும்: 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டம் 125 நாட்களாக உயர்த்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம், 150 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டமாக உயர்த்தப்படும்.

5. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம்: மகளிருக்கு ரூ. 25,000 மானியத்துடன், 5 லட்சம் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கப்படும். ஆகிய 5 வாக்குறுதிகளை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

# சொந்த நாட்டிலேயே அகதியாக நிற்பது போல்...” நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்துக்கு வசந்தபாலன் கண்டனம்!

சென்னை, ஜன.18-

நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் வாங்கிய படங்களை முன்வைத்து இயக்குநர் வசந்தபாலன் காட்டமான பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

2026ம் ஆண்டில் நெட்ஃப்ளிக்ஸ் கைப்பற்றியுள்ள தமிழ் படங்களின் ஓடிடி உரிமை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நீண்ட பதிவொன்றை வெளியிட்டுள்ளார் இயக்குநர் வசந்தபாலன். அதில், “சிறு தயாரிப்பாளர்களுக்கு, புதிய, மத்திம நாயகர்களுக்கு, புதிய அலை இயக்குநர்களுக்கும், திரையரங்குகளும் கிடைப்பதில்லை. ஓடிடி இணையங்களும் இல்லை. தொலைக்காட்சி சேனல்களும் இல்லை. படத்தை எடுத்து வைத்து கொண்டு கோடம்பாக்கத்தின் வீதிகளில் குறுக்கும் நெடுக்குமாக நடக்க வேண்டியிருக்கிறது. ஓட ஓட சினிமாவை விட்டு விரட்டுகிறார்கள், முட்டி மோதி மண்டை உடைந்து தெருவில் கிடக்க வேண்டும். அது தான் அவர்களின் எதிர்பார்ப்பு. பெரிய தயாரிப்பு நிறுவனங்கள்,




பெரிய கதாநாயகர்களுக்கு மட்டுமே எல்லா கதவுகளும் திறக்குமென்றால் இங்கே ஜனநாயகம் எங்கேயிருக்கிறது.?

நல்ல திரைப்படம், அழகான கவித்துவமான கதை, நல்ல திரைக்கதை என்பதெல்லாம் பேச்சேயில்லை. பெரு நிறுவனப்படங்களை பெரிய நடிகர்களின் திரைப்படங்களை மட்டுமே வாங்குவோம் மற்றவர்களெல்லாம் வெளியேறுங்கள் என்கிறது நெட்ஃப்ளிக்ஸ் போன்ற இணையங்களும், தொலைக்காட்சி சேனல்களும், திரையரங்குகளும். சொந்த நாட்டிலேயே அகதியாக நிற்பது போன்ற ஒரு நிலை. நான்கு வருடங்களாக படம் இயக்க முடியாத நிலை. இயக்கினாலும் எங்கே விற்பது? யாரிடம் சென்று கையேந்தி நிற்பது? யார் வாங்குவார்கள்? எங்கு திரையரங்கு கிடைக்கும் என்றொரு பரிதாபமான நிலை எனக்கு மட்டுமில்லை. தமிழ்த்திரைப்பட தயாரிப்பாளர்கள் தொண்ணூறு சதவீதத்தினரின் நிலைமை இதுவே.

நெட்ஃப்ளிக்ஸ் எல்லா ஆண்டுகளும் புதிய படங்களை, சிறிய படங்களை, நல்ல இயக்குநர்களின் திரைப்படங்களைப் புறக்கணிக்கிறது. போன ஆண்டு நெட்ஃப்ளிக்ஸ் வாங்கிய திரைப்படங்களின் தரங்களை நீங்களே இணையத்தில் தேடிப்பாருங்கள். ஒரு சிறு தயாரிப்பாளராக தேசிய விருது பெற்ற இயக்குநராக நெட்ஃப்ளிக்ஸுக்கு என் ஆழ்ந்த கண்டனங்கள்” என்று தெரிவித்துள்ளார் இயக்குநர் வசந்தபாலன்.

# சிவகங்கை மஞ்சுவிரட்டு போட்டியில் 68 பேர் காயம்



சிவகங்கை, ஜன.18-

சிவகங்கை மாவட்டம் சிராவயலில் மஞ்சுவிரட்டு போட்டியில் காளைகள் முட்டியதில் 68 பேர் காயம் அடைந்துள்ளனர். காளைகள் முட்டியதில் 68 பேர் காயமடைந்த நிலையில் 2 பேர் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## திருவொற்றியூர் தொகுதி திமுக சார்பில் கும்மி பாடலுடன் பொங்கல்: கே.பி.சங்கர் எம்எல்ஏ ஏற்பாடு

திருவொற்றியூர், ஜன.18-

சென்னை திருவொற்றியூர் தொகுதி திமுக சார்பில், சமத்துவ பொங்கல், மாட்டுப் பொங்கல் விழா கே.வி.கே. குப்பம் மீனவ கிராமத்தில் நடைபெற்றது. இதற்கு கே.பி.சங்கர் எம்எல்ஏ தலைமை வகித்தார். கிராமத்தின் கோயிலான படவேட்டம்மன் ஆலய வாசல் முன்பு ஏராளமான பெண்கள் செங்கரும்புடன் 3 பானைகளில் புத்தரிசியுடன் பொங்கல் வைத்து, ‘‘பொங்கலோ பொங்கல்’’ என கோஷங்கள் எழுப்பி சூரியனுக்கு படையலிட்டு வழிபட்டனர்.



இதன்பின்னர் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் செய்து மாடுகளுக்கு சிறப்பு பூஜைகள் செய்து பாரம்பரிய நிகழ்வான மீனவ பெண்கள் நடனமாடி பாரம்பரிய கும்மி பாட்டு பாடினர். இதையடுத்து மாற்றுத்திறனாளிகள் முதியோர், பெண்கள் என சுமார் 3 ஆயிரம் பேருக்கு அரிசி, மளிகை பொருட்களுடன் கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்பு, ரொக்க பணம், மற்றும் சுய தொழில் செய்ய தள்ளுவண்டி ஆகிய உதவிகளை கே.பி.சங்கர் எம்எல்ஏ வழங்கினார். இதில், திருவொற்றியூர் தொகுதி முழுவதும் இருந்து திமுகவினர், மீனவர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# வேலூர் சிஎம்சி மருத்துவர் வீட்டில் போதைப்பொருள் பறிமுதல்: அமலாக்கத் துறை அதிகாரிகளை சுற்றவிட்ட போலீஸ்!

வேலூர்,, ஜன.18-

வேலூர் சிஎம்சி டாக்டர் வீட்டில் அமலாக்கத் துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் மெத்தப்பட்டமைன், கஞ்சா போதை பொருளை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக புகார் அளிக்க காவல் நிலையம், போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு என அமலாக்கத் துறையினர் மாறி மாறி அலைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வேலூர் தோட்டப்பாளையம் பிள்ளையார் கோயில் தெருவில் சிஎம்சி மருத்துவர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ளது. இங்கு, மருத்துவர் பிளிங்கின் என்பவர் தங்கியுள்ளார். இவர், கடந்த மூன்று ஆண்டுகளாக சிஎம்சி அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். மருத்துவர் பிளிங்கின் கேரள மாதிலத்தைச் சேர்ந்தவர் என்றும் தற்போது விடுமுறையில் இருப்பதாகவும்




கூறப்படுகிறது. இதற்கிடையில், இவரது குடியிருப்பில் அமலாக்கத் துறை அதிகாரிகள் குழுவினர் துப்பாக்கி ஏந்திய சி.ஆர்.பி.எப் வீரர்கள் பாதுகாப்புடன் நேற்று சோதனை நடத்த முயன்றனர். அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவர் வருவதற்காக நீண்ட நேரம் காத்திருந்தனர். ஆனால், அவர் குடியிருப்புக்கு திரும்பாமல் திடீரென தலைமறைவானார்.

இதையடுத்து, அருகில் வசிக்கும் மருத்துவர்கள் உதவியுடன் பிளிங்கின் வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்ற அதிகாரிகள் சோதனை நடத்தினர். நள்ளிரவு வரை நடந்த சோதனையில் 10 கிராம் மெத்தப்பட்டமைன், 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளை தோட்டப்பாளையம் பகுதிக்கு உட்பட்ட வேலூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்க அமலாக்கப்பிரிவு போலீஸார் சென்றனர். அங்கு புகாரைப் பெற மறுத்த போலீஸார், தங்களுக்கு தொடர்பில்லாத சோதனையில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள் குறித்து வழக்குப்பதிவு செய்ய முடியாது என்றும் போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு போலீஸ் பிரிவில் (என்.ஐ.பி) ஒப்படைக்கும்படியும் கூறி அனுப்பி வைத்தனர். பின்னர், காட்பாடியில் உள்ள என்.ஐ.பி அலுவலகத்துக்கு அமலாக்கத் துறை அதிகாரிகள் சென்றனர். அந்த அலுவலகம் பூட்டியிருந்த நிலையில் தகவலின்பேரில் சிறிது நேரத்தில் என்.ஐ.பி போலீஸார் வந்தடைந்தனர். அமலாக்கத் துறை அதிகாரிகள் என்.ஐ.பி போலீஸாரிடம் நடந்த விவரங்களை கூறினர். அவர்களும் தங்கள் பிரிவில் குறைந்த எடைகொண்ட போதைப் பொருட்கள் மீது வழக்குப்பதிவு செய்ய முடியாது என்றும் ஒரு கிலோவுக்கு மேல் இருந்தால் வழக்குப்பதிவு செய்வோம் எனக் கூறியதுடன் வேலூர் வடக்கு காவல் நிலையம் செல்லும்படி அனுப்பி வைத்தனர். வேறு வழியில்லாமல் அமலாக்கத் துறை அதிகாரிகள் மீண்டும் வேலூர் வடக்கு காவல்நிலையம் சென்றனர். அமலாக்கத் துறை அதிகாரிகளைப் பார்த்ததும் திகைப்படைந்த வடக்கு காவல் நிலைய போலீஸார், அவர்களை காவல் நிலையத்திலேயே அமர வைத்து மீண்டும் என்.ஐ.பி போலீஸாரை காவல் நிலையத்துக்கு வரவழைக்க ஏற்பாடு செய்தனர். அமலாக்கத் துறை அதிகாரிகளை வேலூர் காட்பாடி என மாறி மாறி போலீஸார் சுற்றவிட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், யார் வழக்குப்பதிவு செய்வது என்பதில் இன்று பிற்பகல் வரை முடிவு எட்டப்படவில்லை. மேலும், போதைப் பொருளை கையோடு எடுத்துவராமல் அந்த வீட்டில் வைத்து அதை செல்போனில் எடுத்த புகைப்படத்தை மட்டும் காட்டியதால் போலீஸார் செய்வது தெரியாமல் திகைப்பில் உள்ளனர்.



## தொழிலாளர் முன்னணி விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆட்டோ ஓட்டுனர்கள் சங்கம் எம்பி அருண்நேரு தொடங்கி வைத்தார்

பெரம்பலூர், ஜன.18

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் பகுதியில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆட்டோ ஓட்டுனர்கள் சங்க தொடக்க விழா, பெயர் பலகை திறப்பு விழா நடந்தது. தொழிலாளர் முன்னணி விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆட்டோ ஓட்டுனர்கள் சங்கம் சார்பில் நடந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். மேலிட பொறுப்பாளர் கிட்டு முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு கலந்துகொண்டு சங்க பெயர் பலகையை திறந்து வைத்து, ஆட்டோ டிரைவர்களுக்கு சீருடை மற்றும் நலதிட்ட உதவிகளை எம்பி அருண்நேரு.வழங்கினார்.

நிகழ்ச்சியில் மண்டல செயலாளர் ஸ்டாலின், ஒன்றிய செயலாளர்கள் வெற்றியழகன், பிச்சை பிள்ளை, தயாளன், மணி, ரவிக்குமார், கண்ணதாசன், மாவட்ட அமைப்பாளர்கள் அய்யாக் கண்ணு, அய்யம்பெருமாள், மாவட்ட செய்தி தொடர்பாளர் அழகுமுத்து, மாவட்ட துணை அமைப்பாளர் மணிமாறன், நகர செயலாளர் தங்கசண்முகசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பொங்கல் நாளில் ரூ.518 கோடிக்கு மது விற்பனை” திமுகவுக்கு அன்புமணி கண்டனம்



சென்னை, ஜன.18-

பொங்கல் திருநாளில் ரூ.518 கோடிக்கு மது விற்பனை செய்யப்பட்டுள்ளது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு எந்த நிலையிலும் மதுவிலக்கை நோக்கி பயணிக்கவில்லை என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் பொங்கல், போகிப் பண்டிகை ஆகிய இரு நாள்களில், டாஸ்மாக் வாயிலாக மட்டும் ரூ.518 கோடிக்கு மது விற்பனை ஆகியிருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மக்கள் நலனுக்காக துரும்பைக் கூட அசைக்காத திமுக அரசு, ஆண்டுக்கு ஆண்டு மக்களை மேலும், மேலும் குடிகாரர்களாக்கி மது வணிகத்தைப் பெருக்குவதில் மட்டும் தான் வெற்றி பெற்றிருக்கிறது. இது சாதனை அல்ல.... வேதனை. போகிப் பண்டிகை நாளில் ரூ.217 கோடிக்கும், பொங்கல் நாளில் ரூ.301 கோடிக்கும் மது விற்பனையாகியிருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த ஆண்டில் ரூ.454 கோடிக்கு மது விற்பனையாகிருந்த நிலையில், நடப்பாண்டில் அதை விட 14.10% அதிகம் ஆகும். தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த ஆண்டில் 11.19% அளவுக்கு வளர்ச்சியடைந்த நிலையில், அதை விட அதிகமாக மது வணிகம் வளர்ச்சியடைந்திருக்கிறது. மக்களுக்கு மதுவைப் புகட்டுவதில் மட்டும் தான் திமுக அரசு சாதனை படைக்கிறது. கடந்த ஆண்டு பொங்கல் திருநாளின் போது 4 நாட்களில் ரூ.725 கோடிக்கு மது விற்பனையான நிலையில், நடப்பாண்டில் நாளை வரையிலான 4 நாள்களில் மது வணிகம் ரூ.900 கோடியைத் தாண்டும் என்று கூறப்படுகிறது. இவற்றையெல்லாம் பார்க்கும் போது பொங்கல் திருநாளை ஒட்டி பொங்கல் பரிசாக மக்களுக்கு வழங்கப்பட்ட ரூ.6 ஆயிரம் கோடியையும் இந்த மாதத்திலேயே திரும்பவும் வசூலித்து விட இலக்கு நிர்ணயித்து திமுக அரசு செயல்படுகிறதோ என்ற எண்ணம் தான் எழுகிறது. பொங்கல் திருநாள் மது வணிகத்தில் அதிர்ச்சியளிக்கும் உண்மை என்னவென்றால், மனமகிழ் மன்றங்களின் மூலம் ரூ.82.59 கோடிக்கு மது விற்பனையாகியிருக்கிறது என்பது தான். இது மதுக்கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்ட ரூ.435.41 கோடி மதுவுடன் ஒப்பிடும் போது 19% ஆகும். திமுக ஆட்சிக்கு வந்த ஐந்தாண்டுகளில் 500 மதுக்கடைகளை, அதாவது 9% மதுக்கடைகளை மூடிய திமுக அரசு, 19% கூடுதலாக மது வணிகம் செய்யும் அளவுக்கு மனமகிழ் மன்றங்களைத் திறந்து மதுவை விற்பனை செய்திருப்பது உறுதியாகியிருக்கிறது. மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு எந்த நிலையிலும் மதுவிலக்கை நோக்கி பயணிக்கவில்லை, மதுப் பெருக்கத்தை நோக்கித் தான் பயணிக்கிறது என்பதற்கு இதைத் தவிர வேறு சான்றுகள் தேவையில்லை. மக்கள்விரோத மது ஆதரவு அரசுக்கு வரும் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் மறக்க முடியாத பாடத்தை புகட்டுவார்கள்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## சின்னமனூர் அதிமுக புரட்சித்தலைவர் எம்ஜிஆர் 109 வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

தேனி ஜன.18

தேனி மாவட்டம் சின்னமனூர் ரவுண்டானா பகுதியில் வைக்கப்பட்ட எம்ஜிஆர் திரு உருவ படத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ் டி கே ஜக்கையன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து சின்னமனூர் நகர் கழக செயலாளர் பிச்சைக்கனி தலைமையில் சுமார் 500 க்கும் மேற்பட்ட மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.இந்த நிகழ்ச்சிகள் சின்னமனூர் நகர கழக அதிமுக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் மகளிர் அணி தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## திரிணாமுல் எம்பி மம்தா தாகூருக்கு எதிராக உரிமை மீறல் குழு விசாரணை

புதுடெல்லி, ஜன.18-

மாநிலங்களவையில் திரிணாமுல் எம்பி மம்தா தாகூர் மற்றும் முன்னாள் எம்பி மவுசம் நூர் சிறப்புரிமையை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக உரிமை மீறல் குழு விசாரணைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவையில் கடந்த ஆண்டு டிசம்பர் 18 மற்றும் 19ம் தேதி விபி ஜி ராம் ஜி மசோதா 2025 மீதான விவாதம் நடைபெற்றது.

இந்த விவாதத்தின்போது திரிணாமுல் எம்பி மம்தா தாகூர் மற்றும் முன்னாள் எம்பி மவுசம் நூர் ஆகியோர் அவையின் சுமூகமான செயல்பாட்டுக்கு தடைகளை ஏற்படுத்தியதாகவும், அவையின் மையப்பகுதிக்கு சென்று அவைக்கு உதவிய அதிகாரிகளுக்கு தடையை ஏற்படுத்தியதாக பா எம்பி லக்ஷ்மி காந்த் பாஜ்பாய் மாநிலங்களை செயலரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக மாநிலங்களவை செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘விபி ஜி ராம் ஜி மசோதா விவாதத்தின்போது திரிணாமுல் எம்பி மம்தா தாகூர் மற்றும் முன்னாள் எம்பி மவுசம் நூர் ஆகியோர் நாடாளுமன்ற மரபுக்கு முரணான கருத்துக்களை தெரிவித்ததாகவும், அவை செயல்பாட்டுக்கு எதிராக தடைகளை உருவாக்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.





## மாநகராட்சி கவுன்சிலர்கள் 20 பேருக்கு கேரள ஐகோர்ட் நோட்டீஸ்

திருவனந்தபுரம், ஜன.18-

பல்வேறு கடவுள்கள் மற்றும் தியாகிகளின் பெயர்களில் பதவிப்பிரமாணம் செய்த திருவனந்தபுரம் மாநகராட்சியை சேர்ந்த 20 கவுன்சிலர்களுக்கு கேரள உயர்நீதிமன்றம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கடந்த மாதம் திருவனந்தபுரம் மாநகராட்சியில் கவுன்சிலர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அப்போது பாஜ, காங்கிரஸ், முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த 20 கவுன்சிலர்கள் பல்வேறு கடவுள்களின் பெயர்களிலும், தியாகிகளின் பெயர்களிலும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

இதை எதிர்த்து மார்க்சிஸ்ட் கவுன்சிலரான தீபக் கேரள உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டிருந்த விவரங்கள் வருமாறு: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, கடவுள் பெயரால் அல்லது உளமாற என்று தான் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதுதான் சட்டமாகும். ஆனால் திருவனந்தபுரம் மாநகராட்சியில் 20 கவுன்சிலர்கள் பல்வேறு கடவுள்களின் பெயர்களிலும், தியாகிகளின் பெயர்களும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். எனவே மேரி பதவிப்பிரமாணம் எடுத்த இந்த கவுன்சிலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை விசாரித்த நீதிபதி குஞ்சி கிருஷ்ணன் கூறியது: ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான கடவுள்கள் இருக்கலாம். மனிதர்களையும், இறந்தவர்களையும் கூட அவர்கள் தெய்வமாக நினைக்கலாம். அது அவரவர் உரிமையும், விருப்பமும் ஆகும். அதில் யாரும் தலையிட முடியாது. ஆனால் தங்களுக்கு விருப்பப்பட்ட தெய்வங்கள், மனிதர்கள் பெயரில் பதவிப் பிரமாணம் எடுக்க முடியுமா என்பது தீர்மானிக்க வேண்டிய விஷயமாகும். எனவே இவ்வாறு பதவிப் பிரமாணம் செய்த 20 கவுன்சிலர்களின் பதவிப் பிரமாணம் செல்லுமா என்பது இந்த மனு மீதான தீர்ப்பை பொறுத்தே அமையும்.

தற்போதைக்கு இந்த 20 கவுன்சிலர்கள் தங்களது பணிகளை மேற்கொள்ள எந்த தடையும் கிடையாது. இவ்வாறு கூறிய நீதிபதி, 20 கவுன்சிலர்கள், கேரள அரசு, திருவனந்தபுரம் மாநகராட்சி மற்றும் தேர்தல் ஆணையத்திற்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.





## இந்தியாவின் ரூ.544 கோடி உதவியுடன் காங்கேசன் துறைமுகம் புனரமைப்பு

### இலங்கை அதிபர் அனுர குமார அறிவிப்பு

கொழும்பு, ஜன.18-

இலங்கையின் காங்கேசன் துறைமுகம் இந்தியாவின் ரூ.544கோடி நிதியுதவியுடன் புனரமைக்கப்படும் என்று அதிபர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். இலங்கையின் யாழ்பாணத்திற்கு அருகே உள்ள சாவகச்சேரியில் ஒரு அழகான வாழ்க்கை 2026 என்ற தேசிய வீடு திட்டத்தின் தொடக்க விழா நடந்தது. இந்த விழாவில் கலந்து கொண்ட அதிபர் அனுர குமார திசாநாயக்க, போரின்போது ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

இருப்பினும் நீண்ட காலம் கடந்தபோதிலும் அந்த வீடுகள் முழுமையாக கட்டப்படவிலலை. யாழ்ப்பாண மாவட்டத்தில் வசித்த மக்கள் போரின்போது இடம்பெயர்ந்தனர் என்பதை நான் அறிவேன். போருக்குப் பின்னரும் அவர்கள் இடம்பெயர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். ஒரு குடும்பம் நீண்ட காலம் வீடு இன்றி வாழ்வது நியாயமல்ல. போரினால் இடம்பெயர்ந்தவர்களின் வீடு பிரச்னைகள் எங்களது ஆட்சிக்காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

அழகிய கடற்கரையையும், பல சுற்றுலா அம்சங்களையும் கொண்டுள்ள யாழ்பாண மாவட்டம் சுற்றுலா அபிவிருத்திக்கு அதிக சாத்தியக்கூறுகளை கொண்டுள்ளது. பலாலி விமான நிலையத்தில் உள்ள குறைபாடுகளை களைந்து அதனை புனரமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பதற்கான பணிகள் மிக விரைவில் தொடங்கப்படும். இதற்காக ரூ.544கோடி நிதியுதவி வழங்குவதற்கு இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது” என்றார்.





## சென்னை கடற்கரைகளில் 160 டன் திடக்கழிவுகள் அகற்றம்: சென்னை மாநகராட்சி

சென்னை, ஜன.18-

சென்னை கடற்கரைப் பகுதிகளில் ஜன. 14 முதல் 16 வரை 160.83 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன என சென்னை மாநகராட்சி தகவல் தெரிவித்துள்ளது. அதிகபட்சமாக சென்னை மெரினா கடற்கரையில் 116.17 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றம். பொங்கலை முன்னிட்டு கடற்கரைப் பகுதிகளில் மக்கள் அதிகளவில் கூடிய நிலையில் 160 டன் திடக்கழிவுகள் அகற்றம் செய்யப்பட்டது.

## “அன்று என்னை மகாராஷ்டிராவில் இருந்து வெளியேற சொன்னவர்கள் இன்று...” சிவசேனாவை விளாசிய கங்கனா ரனாவத்



“மும்பை, ஜன.18-

மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தல் முடிவை முன்வைத்து உத்தவ் தாக்கரே பிரிவு சிவசேனாவை கடுமையாக விமர்சித்துள்ளார் கங்கனா ரனாவத். மகாராஷ்டிர உள்ளாட்சித் தேர்தலில் பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. மொத்தம் உள்ள 29 மாநகராட்சிகளில் மும்பை, புனே, நாக்பூர் உள்ளிட்ட 25 மாநகராட்சிகளை பாஜக கைப்பற்றுகிறது. இது குறித்து பாஜக எம்.பி.யும், நடிகையுமான கங்கனா ரனாவத் அளித்த ஊடகப் பேட்டியில், “என்னை துன்புறுத்தி, எனது வீட்டை தரைமட்டமாக்கி, என்னை வசைபாடியவர்களை, நான் மகாராஷ்டிராவை விட்டே வெளியேற வேண்டும் என்று சொன்னவர்களை இன்று மகாராஷ்டிரா வெளியேற்றியுள்ளது. இவர்களைப் போன்ற பெண் வெறுப்பாளர்கள், குடும்ப அரசியல் செய்யும் கும்பலைச் சேர்ந்தவர்கள் மக்கள் தீர்ப்பால் சரியான இடத்துக்கு அனுப்பப்பட்டிருபதில் எனக்கு மகிழ்ச்சி.” என்று தெரிவித்துள்ளார். வீடு இடிப்பின் பின்னணி: கடந்த 2020ம் ஆண்டு மும்பை பாந்த்ரா மேற்கில் இருந்த கங்கனா ரனாவத்தின் பங்களாவின் ஒருபகுதி மும்பை மாநகராட்சியால் இடிக்கப்பட்டது. அப்போது சிவசேனா ஆட்சியில் இருந்தது. இன்று சிவசேனா உத்தவ் தாக்கரே பிரிவு, ஷிண்டே பிரிவு என்று இரண்டாகப் பிரிந்து இதில் ஷிண்டே பிரிவு பாஜகவுடன் கூட்டணி வைத்து ஆட்சியில் உள்ளது.

2020ல் மும்பையை ‘மினி பாகிஸ்தான்’ என்று கூறியதற்கு கங்கணா மன்னிப்புக் கோர வேண்டும். அவ்வாறு மன்னிப்புக் கேட்காவிட்டால், மும்பைக்கு வரக்கூடாது என்று அப்போதைய சிவசேனா எம்.பி. சஞ்சய் ராவத் எச்சரித்தார். இதனால் சிவசேனா தலைவர் சஞ்சய் ராவத்துக்கும், கங்கணா ரணாவத்துக்கும் இடையே ட்விட்டரில் கடுமையாக வாக்குவாதம் நடந்தது. இதனால் நடிகை கங்கணா ரணாவத்துக்கும், மகாராஷ்டிராவில் ஆளும் சிவசேனா கட்சிக்கும் இடையிலான மோதல் வெடித்தது. இந்தச் சூழலில், நடிகை கங்கணா ரணாவத்துக்கு ஒய் பிளஸ் பாதுகாப்பை மத்திய அரசு வழங்கியதையும், சிவசேனா தலைவர்கள் கண்டித்தனர். அரசியல் உள்நோக்கம் கொண்டது என விமர்சித்தனர்.

இந்தச் சூழலில் மும்பை மாநகராட்சி சார்பில் ஒரு குழுவினர், மும்ரை பாந்த்ராவில் உள்ள பாலி ஹில் பகுதியில் உள்ள கங்கனா ரணாவத் வீட்டில் அனுமதியின்றி பல்வேறு கட்டிங்கள் கட்டப்பட்டதற்கு 24 மணிநேரத்தில் விளக்கம் கேட்டு நோட்டீஸ் ஒட்டிச் சென்றனர்.

ஆனால், கங்கணா ரணாவத் தரப்பில் எந்தப் பதிலும் அளிக்கப்படவில்லை. மும்பை மாநகராட்சி அதிகாரிகள் அளித்த கெடு முடிந்ததையடுத்து, மண் அள்ளும் இயந்திரத்தின் உதவியுடன் கங்கணா வீட்டில் அனுமதியின்றி செய்யப்பட்டிருந்த மாற்றங்களை இடித்து அதிகாரிகள் அகற்றினர்.

இதைத்தான் இப்போது கங்கனா சுட்டிக்காட்டி உத்தவ் தாக்கரே பிரிவு சிவசேனாவை கடுமையாக விமர்சித்துள்ளார்.



■ உலகப் புகழ் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை காண வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு, நமது மதுரை மாவட்ட நிருபர் டி.உதயசூரியன் சக்கர வியூகம் நாளிதழை வழங்கிய போது..,

## திண்டுக்கல் மாநகராட்சி 8வது வார்டில் மகளிர் அணி அமைப்பாளர் அமுதவள்ளி சக்திவேல் தலைமையில் சமத்துவ பொங்கல் விழா

திண்டுக்கல், ஜன18.-

திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 8 வது வார்டில் ராமசாமிபுரம், சொசைட்டி தெரு, மூக்கன்ஆசாரி சந்து, சுபேதார் சந்து, காளிமுத்துபிள்ளை சந்து. நாட்டாண்மைக்காரன் சந்து, நாயக்கர் புதுத்தெரு 4 தெருக்கள், கிருஷ்ணாராவ் சந்து, காளிமுத்துப்பிள்ளை சந்து, ராமசாமிபுரம், மேற்கு கோவிந்தாபுரம் பகுதியைச் சேர்ந்த சொசைட்டி தெரு உட்பட 10க்கும் மேற்பட்ட தெருக்கள் உள்ளன. அப்பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கான சமத்துவ பொங்கல் விழா அங்காள ஈஸ்வரி, பேச்சியம்மன் மற்றும் கருப்பண சாமி கோவில் வளாகத்தில் நடைபெற்றது.



விழாவிற்கு மகளிர் அணி அமைப்பாளர் அமுதவள்ளி சக்திவேல் தலைமை தாங்கினார். விழாவில் நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் பாரம்பரிய உடையணிந்து சமத்துவத்து பொங்கல் வைத்து அம்மனை வழிபாடு செய்தனர். விழாவை சிறப்பு சேர்க்க ஜல்லிக்கட்டில் கலந்து கொள்ளு காளைமாடு கொண்டுவரப்பட்டது. அதற்கு அங்கிருந்த பெண்கள் மற்றும் சிறுவர் சிறுமியர்கள் பொங்கல் மற்றும் வாழைப்பழங்ளை ஊட்டி விட்டு மகிழ்ந்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்களுக்கு விளையாட்டு போட்டிகள் மற்றும் நடனப்போட்டிகள் நடைபெற்றது. சிறுவர் சிறுமியருக்கான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. 8வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும், திமுக செயலாளருமான மார்க்கெட் சக்திவேல் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்தினார். சமத்துவ பொங்கல் விழா அப்பகுதி மக்களிடையே மகிழ்ச்சியையும் ஒற்றுமையையும் ஏற்படுத்தியுள்ளது.



## சங்கரன்கோவில் சங்கரநாராயணசாமி கோவிலில் கோமதி அம்பாளுக்கு பொங்கல் படி கொடுக்கும் நிகழ்ச்சி

சங்கரன்கோவில், ஜன 18.-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சங்கர நாராயணசாமி கோவிலில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோமதியம்பாளுக்கு சைவ செட்டியார் சமுதாயம் சார்பில், பொங்கல் படி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கோமதி அம்பிகை மாதர் சங்க அமைப்பாளர் பட்ட முத்து, சைவ செட்டியார் சங்க தலைவர் லட்சுமணன், செயலாளர் சொக்கலிங்கம், பொருளாளர் சேகர், உறுப்பினர்கள் உலகநாதன், மணிகண்டன், வெள்ளையன், ரமேஷ், திருவள்ளுவர், மெர்குரி சங்கர், முத்துமாரி, மாரியப்பன், பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## சுரண்டையில் எம்ஜிஆர் 109வது பிறந்தநாள் விழா அதிமுகவினர் மரியாதை

சுரண்டை, ஜன18,-

தென்காசி மாவட்டம் சுரண்டையில் அதிமுக சார்பில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்ஜிஆர் பிறந்தநாள் விழா இன்று நடைபெற்றது. சுரண்டை நகர செயலாளர் சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், மாவட்ட அவைத் தலைவர் சண்முகசுந்தரம் முன்னிலை வகித்தார். தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் முனைவர் எம்எல்ஏ செல்வ மோகன்தாஸ் பாண்டியன் எம்ஜிஆர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாநில பேச்சாளர் பாலமுருகன் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

## அப்துல் கலாம் நினைவு அறக்கட்டளை இயற்கை பாதுகாப்பு மற்றும் வாகன பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு

குன்னூர் ஜன 18.-

ஏற்படுத்தும் வகையில் குன்னூர் *அப்துல் கலாம் நினைவு அறக்கட்டளையின் சார்பாக காவல் துறையினரின்* பரிந்துரையின் பெயரில் மேட்டுப்பாளையம் கல்லார் பகுதியில் இருந்து குன்னூர் வரை விழிப்புணர்வு தொடர் ஓட்டம் நடைபெற்றது.இந்த ஓட்டத்தில் மேட்டுப்பாளையம் கல்லாரில் இருந்து குன்னூர் வரை திரு.நிதிஷ் வரன்,கீழ்பரத் நகர் பகுதியை சார்ந்தவர் சுமார்



27 கிலோ மீட்டர்களும் ஓட்டு பட்டறை பகுதியைச் சார்ந்த செல்வி.ஆசிகா சுமார் 17 கிலோமீட்டர் தொடர் ஓட்டம் ஓடி குன்னுரை வந்தடைந்தனர். குன்னூர் காவல் நிலைய அதிகாரி பாஸ்கரன் ஐயா மற்றும் பண்ணாரி ஐயா அவர்கள் இருவரையும் ஊக்கப்படுத்தி இயற்கை மற்றும் சாலை பாதுகாப்பு குறித்து பொதுமக்களுக்கும் வாகன ஓட்டிகளுக்கும் விழிப்புணர்வுகள் கொடுத்தனர். இந்த விழிப்புணர்வு தொடர் ஓட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு பாதுகாப்பாக மேட்டுப்பாளையம் *சுவாசம் ஆம்புலன்ஸும்* *அப்துல் கலாம் அறக்கட்டளை நிர்வாகிகளும்* பின் தொடர்ந்தனர்.மேலும் அவர்களுக்கு நான்கு சக்கர வாகன பழுது பார்ப்போர் சங்கம், இந்திரா நகர் பொதுமக்கள் மற்றும் நீலகிரி சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் செயலாளர் கண்டோன்மெண்ட் வினோத்குமார் போன்றோர் ஊக்கப்படுத்தி கௌரவப்படுத்தினார்கள். இந்த தொடர் ஓட்டத்தில் நெகிழிகளை பயன்படுத்தக் கூடாது என்பதும் வாகனங்கள் அதிக வேகம், தலைக்கவசம் போன்றவற்றை பற்றி மையமாக கொண்டு விழிப்புணர்வுக்காக நடத்தப்பட்டது.... இந்த விழிப்புணர்வு தொடர் ஓட்ட நிகழ்வை *அப்துல் கலாம் நினைவு அறக்கட்டளை* நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்....



## முல்லை பெரியாறு அணை கட்டிய கர்ணல் ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா

தேனி, ஜன. 18.-

தேனி மாவட்டம் லோயர்கேம்ப் கர்ணல் ஜான் பென்னிகுயிக் பிறந்தநாள் முன்னிட்டு, மணிமண்டபத்தில் தமிழர் தேசிய ஃபார்வர்ட் பிளாக் கட்சி நிறுவனர் தலைவர் பி.செல்வம் மற்றும் தேனி மாவட்ட பொது செயலாளர் அம்மாபட்டி கே.சேகர் தலைமையில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில், மாநில தொண்டரணி செயலாளர் செல்வம் - விஜய்பாபு, மாவட்ட செயலாளர் மணிகண்டன், மாவட்ட மாவட்ட துணை தலைவர் பண்ணை மகேஷ்வரன் , மாவட்ட இணை செயலாளர் ரமேஷ் பாபு,

மாவட்ட இளைஞரணி தலைவர் அஜித், மாவட்ட தொழில்நுட்பச் செயலாளர் ஏ.வசந்த், மற்றும் மாவட்ட, நகர,ஒன்றிய, நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## ஜம்முகாஷ்மீரில் நடைபெற்ற தேசிய ரோல்பால் போட்டி திண்டுக்கல்மாணவிகள் 4 பேர் சாதனை

சின்னாளபட்டி, ஜன 18.-

ஜம்முகாஷ்மீரில் 17 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கான ரோல்பால் போட்டிகள் நடைபெற்றது. இதில் தமிழக அணி சார்பாக கலந்து கொண்ட மாணவிகள் 12 பேரில், சின்னாளபட்டி ராஜன் உள்விளையாட்டு அரங்கில் பயிற்சி பெற்ற, கேப்டன் மதுஸ்ரீ, அனுஸ்ரீ, லீபிகா, தனுஷ்கா உட்பட 4 பேர் கலந்து கொண்டனர். அணிக்கு கேப்டனாக மதுஸ்ரீ செயல்பட்டார். அரையிறுதி போட்டியில் உத்திரபிரதேச மாநில அணியும், தமிழக அணியும் மோதின. இதில் வெற்றிபெற்ற தமிழக அணி இறுதிப்போட்டியில் அசாம் அணியுடன் மோதின. அசாம் அணி வெற்றி பெற்றது. இரண்டாம் இடத்தை தமிழக அணி தக்கவைத்து வெள்ளி பதக்கத்தை தட்டிச்சென்றது. வெற்றி பெற்ற மாணவிகளுக்கான பாராட்டு விழா சின்னாளபட்டி பிரிவில் உள்ள ராஜன் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு ரோல்பால் சங்கத்தலைவர் மாஸ்டர் எம்.பிரேம்நாத் தலைமை தாங்கினார். திண்டுக்கல் ரோல்பால் சங்கத் தலைவர் எஸ்.ஏ.டி. வாஞ்சிநாதன் மற்றும் சீனியர் பயிற்சியாளர்கள், 7வது உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்ற மாணவர் தீபக்ராஜா, மாணவி மதுமிதா, மற்றும் ராஜன் உள் விளையாட்டு அரங்கு நிர்வாகிகள் மாணவிகளின் பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டு வெற்றிபெற்ற விளையாட்டு வீராங்கனைகளை பாராட்டி வாழ்த்தினார்கள்.





■ திமுக தலைமை கழகம் திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலை தெற்கு ஒன்றியத்திற்கு எம் ஆர் பாபு ஒன்றிய கழக பொறுப்பாளராகவும் உடுமலைக் கிழக்கு ஒன்றியத்திற்கு இ.கே.மாரிமுத்து முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களை பொறுப்பாளராக திமுக தலைமை கழகம் அறிவித்தார்கள். இதன் நிகழ்ச்சியாக கழக துணை பொதுச்செயலாளர் செய்தித்துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே. ஈஸ்வர சாமி, அவைத் தலைவர் ஜெய ராம கிருஷ்ணன் ஆகியோர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்து சால்வை அணிவித்தார்கள். ஒன்றிய கழகச் செயலாளர்கள் மாரிமுத்து, பாபு ஆகியோர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்கள்.

## சர்வதேச அளவில் போதைப்பொருள் கடத்தல் தமிழ்நாடு உட்பட 7 மாநிலங்களில் 26 இடங்களில் 'ஈடி' ரெய்டு

புதுடெல்லி, ஜன.18-

கோவா காவல்துறையினர் போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்த வழக்கின் அடிப்படையில், சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பலின் பணமோசடி நடவடிக்கைகளை அமலாக்கத்துறை விசாரித்து வருகிறது. இந்தக் கும்பல் மாநிலங்களுக்கு இடையே மிகவும் நுட்பமான முறையில் போதைப் பொருட்களை விநியோகம் செய்து வந்துள்ளது. கூரியர் மற்றும் தபால் சேவைகளைப் பயன்படுத்திப் போதைப்பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன. மேலும், வங்கிப் பரிவர்த்தனை, யுபிஐ, கிரிப்டோ கரன்சி மற்றும் நேரடியாகப் பணம் எனப் பல வழிகளில் சட்டவிரோதப் பணப் பரிமாற்றம் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், அமலாக்கத்துறையின் பனாஜி மண்டல அலுவலகம் மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு (என்சிபி) இணைந்து நேற்று அதிரடி சோதனையில் ஈடுபட்டன. கோவா, மகாராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா, ஒடிசா மற்றும் டெல்லி ஆகிய 7 மாநிலங்களில் உள்ள 26 இடங்களில் இந்தச் சோதனை நடைபெற்றது. கோவாவில் மட்டும் 12 இடங்களில் நடந்த சோதனையில் கணக்கில் வராத ரொக்கப் பணம், கஞ்சா, எம்டிஎம்ஏ, எக்ஸ்டசி, கொக்கைன் உள்ளிட்ட போதைப் பொருட்கள், முக்கிய ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தச் சோதனையின் மூலம் மிகப் பெரிய கடத்தல் வலையமைப்பை முறியடித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தென்காசி மாவட்டம் துத்திகுளத்தில் சமத்துவ பொங்கல் விழா

தென்காசி : ஜன 18.-

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் வட்டாரம் துத்திகுளம் இந்து நடுநிலைப்பள்ளி மேனாள் மாணவர்கள் சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. காலையில் தொடங்கிய இவ்விழாவிற்கு துத்தி குளம் கிராம சமுதாய நாட்டாண்மைகள் சுரேஷ், அருள்ராஜ், முப்புடாதி, அன்பழகன், கதிரேசன், முனியராஜ், முத்துசாமி, ஆகியோர் கூட்டுத்தலைமை வகித்தனர். பள்ளி நிர்வாகி மை பா சேசுராஜ் முன்னிலை வகித்தார். தலைமை ஆசிரியர் ஆரோக்கிய ராசு அனைவரையும் வரவேற்று பேசினார். இவ்விழாவின் தொடக்கமாக நம் பாரம்பரியமான



உழவுத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் மாடுகள் பூட்டபட்ட மாட்டு வண்டி அலங்கரிக்கப்பட்டு இசை ஆசியர் மேள தாளங்கள் முழங்க மங்கள நாதஸ்வர இசையோடு பள்ளி மாணவ மாணவிகளின் சிலம்பாட்டம், சுருள் வாள் சுழற்றல் போன்ற நிகழ்வோடு ஊரின் முக்கிய வீதிகளின் வழியாக அனைத்து சமுதாய மக்களின்ஒற்றுமையை வெளிக் கொணரும் வகையில் அனைவரும் இணைந்து பொங்க விடும் பானை அரிசி காய்கறிகளோடு ஊர்வலமாக வந்து பின்னர் பள்ளி விளையாட்டு மைதானத்தில் சமத்துவ பொங்கலிட்டனர். அதன் பின் சிறார் முதல் பெரியோர் வரை அனைவருக்குமான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. மதியம் ஊர் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு சர்க்கரை பொங்கலோடு உணவு பரிமாறப்பட்டது. அனைவரும் மகிழ்வோடு உண்டனர் பின்னர் பிற்பகல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு பள்ளி நிர்வாகி மை பா. சேசுராஜ் தலைமை வகித்தார்.

மேலும் நெல்லை மணி அன் கோ குழுமம் சார்பில் தாய் தந்தையை இழந்த 25 மாணவ மாணவிகளுக்கு பள்ளி சீருடையும் துத்தி குளத்தில் வயது முதுமையான 20 ஆண் பெண்களுக்கு குளிர்காலத்திற்கான போர்வை வழங்கப்பட்டதுவிழாவில் பள்ளி மாணவ மாணவிகளின் நாட்டுப்புற கலை நிகழச்சி நடந்தது. இந்நிகழ்ச்சியை ஆசிரியர் சத்யா அடைக்கலமேரி தொகுத்து வழங்கினார். இறுதி யில் ஆசிரியர் ஸ்டீபன் நன்றி கூறினார். இவ்விழா ஏற்பாடுகளை மேனாள் மாணவர்கள் சங்கம் இசக்கி ராஜா, செல்வம், ஆசிரியர்கள் ஜோஸ்பின் தெரசா பிரான்சிஸ்அந்தோணியம்மாள் செல்வம் ரோசி அந்தோணிசாமி உடற் கல்வி ஆசிரியர் மணி யோகா மாஸ்டர் பால கணேஷ் பதிலி ஆசிரியர்கள்அருள் கனி முத்துலெட்சுமி பள்ளிகாலை மாலை உணவு வழங்கும் பொறுப்பாளர்கள் உசோலா மாரியம்மாள் மாரீஸ்வரி வசந்தி பொன்னம்மாள் ஆகியோர் செய்திருந்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000